## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**பைத்துல் ஃபுதூஹ் ,இலண்டன்.** **நாள்: 14.12.2007**

அல்லாஹ் தனது நபிமார்கள், அந்த நபிமார்கள் நிறுவிய ஜமாஅத்துகள் ஆகியவற்றின் உண்மையை நிரூபிப்பதற்காக அடையாளங்களை அனுப்புகின்றான். நமது அடையாளங்களை அனுப்புவதிலிருந்தும் எதுவும் நம்மை தடுக்கவில்லை என்ற வசனத்தின் அடிப்படையில் அல்லாஹ் தனது நபிமார்களுக்கு சாதகமாக அடையாளங்களையும் அற்புதங்களையும் வெளிப்படுத்தி காட்டியுள்ளான். எல்லாவிதமான ஆற்றல்களுக்கும் உறைவிடமாக திகழ்கின்ற அல்லாஹ் வல்லோனாகவும், எல்லாரையும் மிகைத்து நிற்கக்கூடியவனாகவும் இருக்கின்றான். ஸமூது சமுதாயத்தவருக்கு வழங்கப்பட்ட பெண் ஒட்டகம் தொடர்பான அடையாளத்திலிருந்தும் நீங்கள் பாடம் படிக்க வேண்டும் என்று அவன் எச்சரிக்கை செய்ததுடன் மட்டுமல்லாமல் இன்றைய காலத்து மக்களையும் அவன் எச்சரித்துள்ளான். குறிப்பாக முஸ்லிம்களை அவன் எச்சரித்துள்ளான். முஸ்லிம்களே! இந்த இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களை உங்கள் முன்பு எடுத்தோதியுள்ளார்கள். அதனைப் படிக்கின்ற நீங்கள் படிப்பினையைப் பெற வேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு செய்துள்ளார். கடந்து காலத்து சமுதாய மக்களுக்கு நிகழ்ந்த சம்பவங்களை பழைய கதைகளாக நீங்கள் கருதி விட வேண்டாம். அல்லாஹ் இப்போதும் தனது அற்புதங்களை வெளிப்படுத்தி உங்களைப் பிடிப்பதற்கு ஆற்றல் பெற்றவனாகவும் வல்லமையுள்ளவனாகவும் இருக்கின்றான். எனவே, ஒருபோதும் நீங்கள் கவனமற்றவர்களாக இருக்கக் கூடாது. அல்லாஹ்வை ஒருபோதும் நீங்கள் மறந்து விடக் கூடாது. பதினான்காவது நூற்றாண்டு தொடர்பாக கூறப்பட்டுள்ள முன்னறிவிப்புகளை சிந்தனை செய்து பாருங்கள். தனது மஸீஹிற்காகவும், மஹ்திக்காகவும் இறைவன் இறக்கியுள்ள அடையாளங்களை பாருங்கள் என்று அல்லாஹ்வின் பெயரால் உங்களை அழைக்கின்ற ஒருவரின் கருத்துக்களை மேலோட்டமாக பார்த்து விட்டு சென்று விடாதீர்கள். காலத்து மஸீஹை பொய்ப்படுத்துவதிலும், மறுப்பதிலும் வரம்பு மீறி செயல்பட்டு அல்லாஹ்விடம் இருந்து கிடைக்கும் இழிவிற்கு ஆளாகி விடாதீர்கள். அந்த மஹ்தியை ஏற்றுக் கொண்டவர்களின் உள்ளத்திற்கு காயத்தை ஏற்படுத்தி அடையாளங்களை காட்டுகின்ற அந்த இறைவன் தனது சக்தியை இழந்து விட்டான் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். அல்லது அவனது இத்தகு வல்லமைமிக்க செயல்கள் இப்போது முடிவிற்கு வந்து விட்டதாகவும் நீங்கள் கருத வேண்டாம்.

**வமா மன:்னா** (எதுவும் நம்மை தடை செய்யவில்லை) என்ற அறிவிப்பில் இறைவன் என்ன கூறியுள்ளான். எதன் பக்கம் கவனமூட்டுகின்றான் என்பதைப் பற்றி நீங்கள் சிந்தனை செய்யுங்கள். தீய முடிவு ஏற்படுவதிலிருந்தும் உங்களை எச்சரிப்பதற்காகவே நாம் அடையாளங்களை அனுப்பியுள்ளோம் என அல்லாஹ் இந்த வசனத்தில் அறிவிக்கின்றான். பல அடையாளங்களை இன்றும்கூட அல்லாஹ் காட்டுகின்றான். ஆனால், காணக்கூடிய கண்கள்தான் அவற்றைக் காண முடியும். கடந்த கால நபிமார்களுடன் தொடர்புபடுத்தி இத்தகைய பல சம்பவங்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் எடுத்துக் கூறியுள்ளான். கடந்த கால சமுதாயங்களுக்கு நிகழ்ந்தவற்றை அல்லாஹ் எடுத்துக் கூறும்போது அல்லாஹ் அற்புதங்களை தனது நபிமார்களுக்கு சாதகமாக வெளிப்படுத்திக் காட்டுவதாக கூறியுள்ளான். எவ்வாறு அவை வெளிப்பட்டன? எப்படி சமுதாயங்கள் அழிக்கப்பட்டன? என்பதையெல்லாம் இறைவன் நமக்கு தெளிவாக கூறியிருப்பது நமக்கு அவற்றை கதைகளாக கூற வேண்டும் என்பதற்காகவா? நீங்கள் விரும்புவதை செய்யுங்கள்; செயலற்ற வாழ்க்கை வாழ்ந்து கொள்ளுங்கள்; அநீதி இழைப்பதில் முன்னேறுங்கள்; எள்ளி நகையாடுங்கள்; வரம்பு மீறி செயல்படுங்கள். உங்களை நாம் எதுவும் கூற மாட்டோம் என்ற உத்திரவாதம் தருவதற்காகவா இறைவன் இதைக் கூறியுள்ளான்? இவ்வாறு நீங்கள் எண்ணுவதாக இருந்தால் இது இறைவன் மீது நீங்கள் சுமத்துகின்ற மிகப்பெரும் குற்றமாகி விடும். இப்படிப்பட்ட சம்பவங்களிலிருந்து அறிவுள்ளவர்கள் படிப்பினை பெறுவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக ஒரு நுட்பமான கருத்தைக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் ஆற்றல்களும் வல்லமைகளும் எல்லையற்றதாக இருப்பதால் அவன் தனது அடையாளங்களை ஒவ்வொரு சமுதாயத்திற்கும் பல விதத்தில் காட்டுகின்றான். எனவே, ஹஸ்ரத் மூஸா

(அலை) அவர்களுக்காக காட்டப்பட்ட அதே அடையாளம் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களுக்காக காட்டப்படவில்லை. (அதாவது அடையாளங்கள் ஒரே விதத்தில் காட்டப்பட வில்லை.) லூத், ஆது, ஸமூது போன்ற சமுதாயங்களுக்கும் ஒரே விதத்திலான அடையாளங்கள் வெளிப்படவில்லை. ஒரு சமுதாயத்தை அல்லாஹ் ஏதாவதொரு விதத்தில் பிடித்திருந்தால் மற்றொரு சமுதாயத்தை அவன் இன்னொரு விதமாக பிடித்திருக்கின்றான்.

எனவே, அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் எல்லா சமயங்களிலும் நமது உள்ளத்தில் இருக்க வேண்டும். அதன் மூலமாக அல்லாஹ்வின் கருணையையும் அருளையும் ஈர்ப்பவர்களாக நாம் ஆக முடியும். அல்லாஹ் மிகவும் கருணை காட்டக்கூடியவனாக இருக்கின்றான். அவன் தண்டனையின் அடையாளங்களை மட்டும் காட்டுவதில்லை. மாறாக, அவன் நற்செய்திகளையும் வழங்குபவனாக இருக்கின்றான். மக்கள் வரம்பு மீறி செயல்படும்போது அவர்களுக்கு அவன் தண்டனையையும் வழங்குகின்றான்.

திருக்குர்ஆனில் பலவந்தம் மற்றும் தண்டனை தொடர்பான விஷயங்கள்தான் அதிகமாக இருக்கின்றன என்று இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களில் சிலர் கூறியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: **ரஹ்மதி வசிஅத் குல்ல ஸய்யின்** - எனது கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. அல்லாஹ்வின் கருணையின் காரணமாகத்தான் பல்வேறு தண்டனைகள் வராமல் இருக்கின்றன. அல்லது அவை வருவதற்கு முன்புள்ள கால அவகாசம் நீட்டப்படுகிறது. எனவே, **இஸ்திக்ஃபார்** (பாவமன்னிப்பு) செய்வதும், தவ்பா செய்வதும், அல்லாஹ் விதித்துள்ள வரம்புகளை மீண்டும் மீண்டும் மீறி செயல்படாமல் இருப்பதும் அடியானின் பணியாகும். இவ்வகையில் முஸ்லிம்கள் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றார்கள். நமக்கு அந்த வரம்புகளைப் பற்றி தெளிவாக தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் கடந்த கால சம்பவங்களை சுட்டிக்காட்டி அவை அந்த சமுதாயங்களுக்கு அடையாளங்களாக ஆகிவிட்டதை எடுத்துக் கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அல்லாஹ் நமக்கு சரியாக வழிகாட்டியுள்ளான். எனவே, இந்த வரம்புகளைப் பேணியவாறு அவற்றிற்குள் நின்று செயல்படுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாக இருக்கின்றது. அவ்வாறு செயல்படுவதன் மூலமாக உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் விதித்துள்ள நற்செய்திகளிலிருந்து நற்பலனை நாம் பெற முடியும். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

**வயுபஸ்ஸிருல் முஃமினீனல்லதீன யஃமலூன ஸாலிஹாத்தி அன்னலஹூம் அஜரன் ஹஸனா** - நம்பிக்கை கொண்டு அதற்கேற்ப பொருத்தமான நற்செயல்களை செய்பவர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக! அவர்களுக்காக இறைவன் புறமிருந்து நற்கூலி விதிக்கப்பட்டுள்ளது.

நற்கூலியை பெறுபவர்கள் தொடர்ச்சியாக நற்செயல்கள் செய்து வருவர். உண்மையான நம்பிக்கையாளர்கள் நற்செயல்களை செய்வதில் இவ்வாறே தொடர்ந்து முயற்சி செய்து வருவார்கள். இப்படிப்பட்ட நிலையில் அவர்களது ஈமானும் சீர்குலையாமல் இருக்கும்.

அடையாளங்கள் எவ்விதத்தில் வெளிப்படும் என்பதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள்:

அடையாளங்கள் இரு வகைப்படும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று எச்சரிக்கை வடிவிலான அடையாளம். இதனை இறை கோபத்தை வெளிப்படுத்தும் அடையாளம் என்றும் கூறலாம். இரண்டாவதாக, நற்செய்திகள் வடிவிலான அடையாளம். இதனை இறை கருணையின் அடையாளம் என்றும் கூறலாம்.

எச்சரிக்கை வடிவிலான அடையாளங்கள் கடுமையாக நிராகரிக்கின்றவர் களுக்கும், கடின உள்ளம் கொண்டவர்களுக்கும், கட்டுப்படாமல் இருக்கின்றவர் களுக்கும், நம்பிக்கையற்றவர்களுக்கும், ஃபிர்அவ்னின் இயல்பை கொண்டவர் களுக்கும் வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றது. இதன் மூலமாக அவர்கள் அஞ்ச வேண்டும். மேலும் இறைவனின் கோபம், இறைவனின் வல்லமை ஆகியவற்றின் தோற்றங்களின் திகில் அவர்களின் உள்ளத்தை ஆட்கொள்ள வேண்டும்.

உண்மையை தேடுபவர்களுக்கும் தூய உள்ளம் கொண்டவர்களுக்கும் நற்செய்திகள் வடிவிலான அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அத்தகைய மக்கள் உள்ளத்தால் ஏழ்மையுடனும், பணிவுடனும் முழுமையான நிச்சய உறுதியையும் தங்களது ஈமானின் வளர்ச்சியையும் வேண்டுபவர்களாக இருப்பர். நற்செய்திகள் வடிவிலான அடையாளங்கள் மூலமாக அச்சமூட்டுவதோ மிரட்டுவதோ நோக்கமாக இருப்பதில்லை. மாறாக, தனக்கு கீழ்படியும் அடியார்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தி அவர்களது

ஈமானிலும் நிச்சய உறுதியிலும் அவர்களை முன்னேற்றமடைய செய்து வேதனை நிறைந்த அவர்களது நெஞ்சங்களில் ஆறுதல் கூறும் வகையில் தனது அன்பான கரத்தை வைப்பதே இறைவனின் நோக்கமாக இருக்கின்றது. எனவே, ஒரு நம்பிக்கையாளர் திருக்குர்ஆன் மூலமாக எப்போதும் நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களை பெற்றுக்கொண்டேயிருப்பார்.

தனது ஈமானிலும், நிச்சய உறுதியிலும் அவர் முன்னேறிக் கொண்டே இருப்பார். நற்செய்திகள் வடிவிலான அடையாளங்கள் மூலமாக ஒரு நம்பிக்கையாளருக்கு மனஆறுதல் கிடைக்கின்றது. இயல்பாகவே மனிதனிடமுள்ள அந்த வேதனையானது அதன் மூலமாக நீங்கி விடுகிறது. மேலும் உள்ளத்தில் நிம்மதி இறங்குகின்றது. அல்லாஹ்வின் வேதத்தை பின்பற்றுவதால் கிடைக்கும் அருள்கள் மூலமாக ஒரு நம்பிக்கையாளர் தனது வாழ்வின் இறுதிநாள் வரை நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களை பெற்றுக் கொண்டேயிருப்பார். அவருக்கு நிம்மதியையும் சுகத்தையும் தருகின்ற அடையாளங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். இதன் காரணமாக நிச்சய உறுதியிலும் இறைஞானத்திலும் அவர் எல்லையில்லா முன்னேற்றத்தை அடைவார். இறைவனை காணும் வகையிலுள்ள உறுதியை அவர் பெறுவார். நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களிலுள்ள இன்பம் என்னவென்றால் இதன் மூலமாக மனிதன் இறைவனது உயர்வான அருட்கொடைகளையும், வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அவன் மீது பொழியப்படும் இறையருள்களையும் கண்டு வல்லமைமிக்க இறைவன் மீதுள்ள அன்பிலும் நேசத்திலும் ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தை பெறுபவராக மாறி விடுவார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் நற்செய்திகள் வடிவிலான அடையாளங்கள் தொடர்பாக அதிகமாக கூறப்பட்டிருக்கின்றது. எதுவரையென்றால் இறைவன் அந்த அடையாளங்களை ஒரு எல்லைக்குட்பட்டதாக வைக்கவில்லை. மாறாக, ஒரு நிரந்தர வாக்குறுதியை அவன் வழங்கியுள்ளான். திருக்குர்ஆனை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் எப்போதும் அப்படிப்பட்ட அடையாளங்களை கண்டு கொண்டிருப்பார்கள் என்பதுதான் அவ்வாக்குறுதியாகும். **லஹுமுல் புஷ்ரா ஃபில் ஹாயத்தித்துன்யா வஃபில் ஆஹிரா. லா தப்தீல லி கலிமாத்தில்லாஹ் ஸாலிக ஹுவல் ஃப்வ்ஸுல் அளீம்** (10:65)

நம்பிக்கை கொண்டவர்கள் உலக வாழ்க்கையிலும் மறுமையிலும் நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களை கண்டு கொண்டிருப்பார்கள். உலகிலும் மறுமையிலும் இறையன்பிலும் இறைஞானத்திலும் எல்லையற்ற முன்னேற்றத்தை அவர்கள் பெற்றுக்கொண்டேயிருப்பார்கள். அது முடிவுறாத முன்னேற்றமாக இருக்கும். இவை இறைவனின் சொற்களாகும். அது ஒருபோதும் நிறைவேறாமல் இருக்காது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களை காண்பதுதான் மிகப்பெரும் வெற்றியாகும். அதுதான் ஒரு அடியானை இறையன்பிலும் இறைஞானத்திலும் அதன் இறுதி எல்லையை அடையும்படி செய்கிறது. அல்லாஹ்வின் எல்லா அடையாளங்களையும் இறைகோபத்தின் அடையாளங்களாகவே கருதிக் கொண்டு இந்த வசனத்திற்கும் இறைவன் தனது எச்சரிக்கை வடிவிலான அடையாளங்களையே வெளிப்படுத்துகின்றான் என்று பொருள் கொடுத்து எச்சரிக்கை விடுப்பதை தவிர இறைவனுக்கு இதில் வேறு எந்த நோக்கமும் இல்லை என்று நாம் கருதுவதாயிருந்தால் இது தவறான பொருளற்ற பொய்யான கூற்றாகும். சுருக்கமாக, எச்சரிக்கை வடிவிலான அடையாளங்களையும் நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களையும் அல்லாஹ் வெளிப்படுத்திக் காட்டுகின்றான்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் அல்லாஹ்வின் அடையாளங்களைக் கண்டு யார் நம்பிக்கை கொள்வார்கள்? என்பதைப் பற்றி கூறியுள்ளான். அப்படிப்பட்டவர்களிடம் என்ன சிறப்புத் தன்மைகள் இருக்க வேண்டும் அல்லது எப்படிப்பட்ட மக்களிடம் இப்படிப்பட்ட சிறப்புத் தன்மைகள் இருக்கும்; அது எவ்வாறு அவர்களது ஈமானை வளர்ச்சியடையச் செய்யும் என்பதைப் பற்றி அல்லாஹ் தெளிவாக கூறியுள்ளான்.

**உதாரணமாக, சூரா இப்ராஹீமில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

நிச்சயமாக நாம் மூஸாவை நம்முடைய அடையாளங்களுடன் (இவ்வாறு கட்டளையிட்டு)

அனுப்பினோம். நீர் உம்முடைய சமுதாயத்தினரை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வெளியேற்றுவீராக. மேலும், அல்லாஹ்வின் நாட்களை அவர்களுக்கு ஞாபகமூட்டுவீராக. நிச்சயமாக முழுமையாக பொறுமையினை மேற்கொண்டு, முழுமையான நன்றி செலுத்தக்கூடிய ஒவ்வொருவருக்கும் இதில் பல அடையாளங்கள் உள்ளன. (14:6)

எந்த நிலையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும் அவர்களது சமுதாயத்தினரும் இருந்தார்களோ, அந்நிலையில் அவர்களது பொறுமையும், நன்றி செலுத்துதலும்தான் அவர்களுக்கு நன்மையைத் தந்தது. இந்த பொறுமையிலும் நன்றி செலுத்துதலிலும் அடையாளம் இருக்கின்றன என்று அல்லாஹ் கூறுகின்றான். திருக்குர்ஆனில் அல்லாஹ் இதனைக் கூறியிருப்பதற்கு காரணம் முஸ்லிம்களும் இந்த கருத்தைப் புரிய வேண்டும் என்பதற்காகவேயாகும். எல்லா நிலையிலும் எதுவும் செய்யாமல் வீட்டிலேயே அமர்ந்து இருக்க வேண்டும் என்பது இதன் கருத்தல்ல. நாங்கள் பொறுமையுடன் இருக்கின்றோம் என்று கூறி விட்டு ஒன்றும் செய்யாமல் இருப்பது என்பது இதன் பொருளல்ல. மாறாக அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு கண்ணியமளித்து அதன் மூலம் உங்கள் நன்றியை வெளிப்படுத்துவதுடன் போதும் என்ற மனநிறைவுடன் பொறுமையை மேற்கொள்வதுதான் இதன் கருத்தாகும்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விட மிக உயர்வான மார்க்க கட்டளைகளை கொண்டு வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இறுதி ஷரீஅத்தை கொண்டு வந்ததன் மூலமாக மார்க்கம் அதன் முழுமையை அடைந்தது. இவ்வகையில் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் பொறுமை மற்றும் நன்றியுணர்வின் தகுதியும் மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் கிடைக்கின்ற அந்த உண்மையான அருட்கொடைகளுக்கு அவர்கள் வாரிசாக முடியும்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட சமுதாயத்தினர் எதுவரை அந்த அருட்கொடைகளுக்கு கண்ணியமளித்தார்களோ அதுவரை அந்த அருட்கொடைகளிலிருந்து அவர்கள் பலனடைந்தார்கள். எப்போது அந்த அருட்கொடைகளுக்கு அவர்கள் மதிப்பளிக்காமல் இருந்தார்களோ அப்போதிருந்தே அந்த அருட்கொடைகள் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு விட்டன. இந்த சம்பவத்தை விளக்குவதன் நோக்கம் என்னவென்றால் பொறுமையும், நன்றியுணர்வும் எப்போதும் தொடர்ச்சியாக செய்து வரும் நற்செயல்களையும், முயற்சிகளையும் சார்ந்து இருக்கின்றது. நிரந்தரமாக உறுதியுடன் தொடர்ச்சியாக நற்செயல்களில் நிலைத்திருப்பதற்கு மறுபெயர்தான் **ஸபர்** (பொறுமை) மற்றும் **ஷுக்கூர்** (நன்றியுணர்வு) ஆகும். நமது நஃப்ஸை தூய்மைப்படுத்துதல், தப்லீக் செய்தல் ஆகியவை இவற்றில் அடங்கும். திருக்குர்ஆன் இதைத்தான் **ஜிஹாதே கபீர்** (மாபெரும் அறப்போர்) என்று கூறுகிறது.

இஸ்லாம் வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருந்த சமயத்தில் அதிலிருந்தும் அதனை காப்பாற்ற மஹ்தி மஸீஹாக அல்லாஹ்வின் பயில்வான் ஒருவர் தோன்றியுள்ளார். இக்காலத்தில் இறைவன் அவரை அனுப்பியிருப்பது அவனது மகத்தான அருட்கொடையாகும். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான அடிமையாவார். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விட அதிகமாக தமது சமுதாயத்தில் இருள்களில் மூழ்கியிருந்தவர்களுக்கு ஒளியை வழங்கிய அந்த மகத்தான தூதரின் அடிமையாக அவர் இருக்கின்றார். நான் குறிப்பிட்ட வசனத்தில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை உதாரணமாக எடுத்துக் கூறியிருப்பதால் அவர்களின் தகுதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தகுதியை விட மிகவும் உயர்வானது என்று இதற்கு பொருளல்ல. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை மட்டும் உங்களது முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்பதும் இதன் பொருளல்ல. மாறாக தமது சமுதாயத்தை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வரும் நோக்கத்துடனேயே தூதர்களை நாம் அனுப்புகின்றோம் என்றே அல்லாஹ் இவ்வசனத்தில் கூறியுள்ளான். ஆனால், எந்த சமுதாயம் ஒளியின் பக்கம் வந்த பிறகு அந்த ஒளியில் உறுதியாக நிலைநிற்கின்றதோ அந்த சமுதாயம் அல்லாஹ்வின் அடையாளமாக ஆகி விடுகிறது. எந்த சமுதாயம் சோம்பேறித்தனமாக செயல்பட்டு பொறுமை, நன்றியுணர்வு ஆகியவற்றின் உயர்வான முன்மாதிரியை காட்டுவதில்லையோ அப்படிப்பட்ட சமுதாயத்திடமிருந்து அருட்கொடைகள் பறிக்கப்பட்டு விடும் என்பதையே அல்லாஹ் இங்கு எடுத்துக் கூறியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் : முஹம்மத் (ஸல்) அவர்களே! நீங்கள் முஸ்லிம்களிடம் இவ்வாறு கூறுங்கள். நீங்கள் இவ்விஷயங்களைப் பின்பற்றி நடந்தால் இறைவனது நற்செய்திகள் வடிவிலான அடையாளங்களுக்கு உரிமையுடையவர்களாக நீங்கள் கருதப்படுவீர்கள். எனவே, இவ்வகையில் மஹ்தி, மஸீஹாக இக்காலத்தில் இறைவன் இறக்கியுள்ள இந்த அருட்கொடைக்கும் நீங்கள் கண்ணியமளிக்க

வேண்டும். அதன் மூலமாக நீங்கள் இழந்த மகத்துவம் மீண்டும் உங்களுக்கு கிடைத்து விடும். இந்த வசனத்தில் அல்லாஹ் **ஸக்கிர்ஹூம் பி அய்யாமில்லாஹ்** (அவர்களுக்கு அல்லாஹ்வின் நாட்கள் தொடர்பாக நினைவூட்டுவீராக (14:6) என்று கூறுகின்றான்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள்** இவ்வசனத்திற்கு விளக்கமளித்தவாறு சமுதாயத்தை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்கான வழிமுறையை இவ்வாறு கூறுகின்றார்கள்:

முதலாவதாக, அல்லாஹ்வின் அருட்கொடைகளின் பக்கம் அவர்களத கவனத்தை திருப்புவீராக. நம்பிக்கையாளர்களுடன் தொடர்புடைய எத்தனை நற்செய்திகள் உள்ளன என்பதை அவர்களுக்கு தெரிவிப்பீராக. மேலும் நம்பிக்கையாளர்களுக்கு என்னென்ன அருட்கொடைகள் கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறுவீராக என இறைவன் தனது தூதரிடம் கூறுகின்றான்.

இரண்டாவதாக, அவர்களுக்கு தண்டனைகளைப் பற்றி கூறி அச்சமூட்டுவதும் அந்த தூதர்களின் பணியாக இருக்கின்றது. இந்த சம்பவங்களை திருக்குர்ஆனில் பாதுகாத்து வைத்ததன் மூலமாக முஸ்லிம்களுக்கு ஒரு நிரந்தரமான போதனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, முஸ்லிம்களின் பார்வை எப்போதும் அல்லாஹ்வின் அருட்கொடைகளின் பக்கம் இருக்க வேண்டும். கீழ்படியாமலும் கட்டுப்படாமலும் இருந்தவர்களுக்கு கிடைத்த இறை தண்டனையின் பக்கம் உங்கள் கவனம் இருக்க வேண்டும் என அல்லாஹ் இவ்வசனம் மூலமாக முஸ்லிம்களுக்கு கவனமூட்டுகின்றான். இந்த இறை போதனையின்படி செயல்படுவதன் மூலமாகத்தான் ஒரு மனிதன் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் இந்த விஷயங்களை புரிந்து செயல்படும் நற்பேற்றை வழங்குவானாக.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் சூரா அந்நஹ்லில் இவ்வாறு கூறுகின்றான்:**

மேலும் அல்லாஹ் வானிலிருந்து நீரை இறக்கினான். இதன் மூலம் அவன் பூமிக்கு, அதன் மரணத்திற்குப் பின்னர் புத்துயிர் அளிக்கின்றான். (உண்மையை) செவியேற்கும் மக்களுக்கு நிச்சயமாக இதில் ஓர் அடையாளம் உள்ளது. (16:66)

இந்த வசனத்தில் விண்ணிலிருந்து நீர் இறங்குவது செவியேற்கும் மக்களுக்கு அடையாளமாக கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இதே அதிகாரத்தில் இந்த வசனத்திற்கு முன்புள்ள வசனங்களை பார்க்கும் போது ஓரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

அவனே மேகங்களிலிருந்து நீரை இறக்குகிறான். அதிலே உங்களுக்கு குடிநீரும் உள்ளது. (அதிலிருந்து கால்நடைகளும் அருந்துகின்றன.) நீங்கள் (உங்கள் கால்நடைகளை) மேய்க்கும் மரங்களும் (வளர்கின்றன). (16:11)

ஆனால் இப்போது நான் கூறிய (16:66) வசனத்தில் அல்லாஹ் பூமிக்கு புத்துயிர் அளிப்பதற்காக இறக்கிய நீர் தொடர்பாக அது கேட்பவர்களுக்கு அடையாளமாக உள்ளது என்று கூறுகின்றான். வெளிப்படையாக பார்க்கும்போது தண்ணீருக்கும் கேட்பதற்கும் எவ்வித தொடர்புமில்லை. அடுத்து கூறிய 16:11 வசனத்தில் இறைவன் குறிப்பிட்டிருப்பது தண்ணீருக்கு மரங்களின் வளர்ச்சியுடனும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் குடிப்பதற்கு பயன்படுவதுடன்தான் தொடர்பு இருக்கின்றது. எனவே 16:66 வசனத்தில் தண்ணீரை செவியேற்பவர்களுடன் இணைத்து தொடர்புபடுத்தி கூறியிருப்பதிலிருந்து அதற்கு வேறு பொருள்தான் இருக்க முடியும். எனவே இதை புரிவதற்கு 16:66 வசனத்திற்கு முன்புள்ள வசனத்தை நாம் பார்க்க வேண்டும். அதில் அல்லாஹ் கூறுகின்றான்:

(உமக்கு) முன்னர் தோன்றிய சமுதாயங்கள் எவ்விஷயத்தில் கருத்து வேற்றுமை கொண்டுள்ளார்களோ அதனை அவர்களுக்கு தெளிவுபடுத்தி (சரியான போதனைகள் மூலம் அவர்களுக்கு வழிகாட்டவும்) அதன் மூலமாக எவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாகி விடுகின்றார்களோ அவர்களுக்கு நேர்வழி கிடைப்பதற்குமேயன்றி இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கவில்லை. இதன் விளைவாக நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் கருணை இறங்குகிறது. (16:65)

இந்த வசனத்திற்கு அடுத்த வசனத்தில்தான் மரணித்துப்போன பூமிக்கு உயிரூட்டுவதில் செவியேற்பவர்களுக்கு அடையாளம் இருப்பதாக கூறுகின்றான். எனவே, இந்த வசனத்தில் தண்ணீர் என்பது ஆன்மீக நீரைத்தான் சுட்டிக் காட்டுகிறது. அந்த நீரானது நபிமார்கள் மூலமாக விண்ணிலிருந்து இறங்குகிறது. அந்த நீர் எல்லாவற்றையும் விட உயர்வாகவும் தூய்மையாகவும் ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் மீதுதான் இறங்கியது. அந்நீர் மரணித்து விட்ட பலருக்கும் வாழ்வை வழங்கியது. கடந்தகால சமுதாயங்களுக்கிடையில் நிலவிய கருத்து வேற்றுமைகளை அது முடிவுக்கு கொண்டு வந்தது. எனவே, திருக்குர்ஆனின் போதனைகள்தான் செவியேற்பவர்களுக்கு வாழ்வை வழங்கக்கூடியவையாக உள்ளன. இங்கு செவிமடுத்தல் என்பதன் பொருள் கேட்பது மட்டும் அல்ல. மாறாக, அந்த கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அதன்படி செயல்படுதல் என்பதே இதன் உண்மையான பொருளாகும். இந்த போதனைகளின்படி செயல்படுபவர்கள் தான் இந்த ஆன்மீக நீரிலிருந்தும் பலனை பெற முடியும். கருத்து வேறுபாடுகளிலும் பிரிவினைகளிலும் சிக்கியிருப்பவர்கள் இந்த நீரிலிருந்து எவ்வித பலனையும் பெற முடியாது. பிரிவுகளாக பிரிந்து போனதன் காரணமாக அல்லாஹ்வின் மகத்தான வேதம் அவர்களிடம் இருந்தும் கூட அவர்கள் அதிலிருந்தும் பலன்பெற முடியவில்லை. அதன் காரணமாக இந்த மகத்தான வேதத்திலுள்ள வசனங்களுக்கு சற்றும் பொருந்தாத விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். வாழ்வை வழங்கக்கூடிய இந்த நீர் பற்றி முஸ்லிம்கள் புரிந்து கொள்ள முடியாமல் போனதால் அந்நீரிலிருந்தும் அவர்கள் பலன்பெற முடியவில்லை.

எனவே, இக்காலத்தில் தோன்றியுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான பேரன்பரின் திருக்குர்ஆன் விளக்கவுரையினை எவர்கள் கவனத்துடன் கேட்பார்களோ அவர்களால் மட்டும்தான் இந்த ஆன்மீக நீரிலிருந்தும் பலனைப் பெற முடியும். ஏனென்றால், அல்லாஹ்வே அவருக்கு வழிகாட்டியுள்ளான். அந்த மஸீஹ் இறைவனிடமிருந்து கிடைத்த அறிவிப்பின் அடிப்படையில் விண்ணிலிருந்து சரியான சமயத்தில் இறங்கியுள்ள தண்ணீராக நான் உள்ளேன் என்று உலகிற்கு அறிவித்துள்ளார். எனவே, இப்போது திருக்குர்ஆனின் அருளூற்று (அருட்கொடைகளின் நீரூற்று) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உண்மை பேரன்பரின் நட்பு மூலமாகவே ஒருவருக்கு கிடைக்க முடியும். அறிவுள்ளவர்களுக்கு சிந்தனை செய்ய வேண்டிய இடமாக இது உள்ளது. மேலும் செவியேற்பவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தூதுச் செய்தியாக இது இருக்கின்றது. எனவே, இந்த தூதுச் செய்தியின் பக்கம் கவனம் செலுத்தியவாறு அதனைக் கேட்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: **இன்ன ஃபீ ஸாலிகல் ஆயத்தன் லிமன் ஹாஃப அதாபல் ஆஹிரா. ஸாலிக யவ்முன் மஜ்முஉன் லஹுன்னாஸு வ ஸாலிக யவ்முல் மஷ்ஹூது** - மறுமையின் தண்டனைக்கு அஞ்சுபவர்களுக்கு இவ்விஷயத்தில் ஒரு மகத்தான அடையாளம் இருக்கின்றது. அது மக்கள் எல்லோரும் ஒன்று திரட்டப்படும் நாளாகும். மேலும் அது (எல்லாராலும்) சாட்சியமளிக்கப்பட்ட நாளாகும். (11:104)

எனவே ஒரு நம்பிக்கையாளர் சென்ற கால சமுதாயங்களின் இந்த சம்பவங்களை படிக்கும்போதும் அவர்களது அநீதியான செயல்கள் காரணமாக அவர்கள் தண்டனைக்கு ஆளானதை படிக்கும்போதும் அல்லது அநீதியிழைக்கின்ற மக்களை எனது தண்டனையின் மூலமாக நான் பிடிப்பேன்; மேலும் மறுமையின் தண்டனை மிகவும் கடுமையான தண்டனையாகும் என்ற இறைவசனங்களை படிக்கின்றபோதும் உண்மையான நம்பிக்கையாளரின் உள்ளம் நடுங்கிவிடும். அவர் மேலும் தனது சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்கின்றார். எல்லாவிதமான அநீதிகளிலிருந்தும் தன்னை விலக்கி வைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றார்.

மேகம் ஒன்றுதிரளும்போதும் புயற்காற்று வரும்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவற்றை காணும்போது அவற்றின் தீங்கிலிருந்தும் பாதுகாப்புக் கோரியவாறு அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்துள்ளார்கள். அல்லாஹ்வின் அடைக்கலத்தின்கீழ் வருவதற்கு அவர்கள் துஆ செய்துள்ளார்கள். எனவே ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் நடைமுறையும் இவ்வாறே இருக்க வேண்டும். ஒரு மூஃமின் இப்படிப்பட்ட விஷயங்களை ஆய்வு செய்து பார்ப்பார். அதன் காரணமாக அவரிடம் அச்சம் ஏற்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்திலுள்ள ஒவ்வொரு நபரும், அவர்களுடன் தொடர்பு இருப்பதாக கூறும் ஒவ்வொருவருக்கும் அநீதியிழைப்பதும், வரம்பு மீறி கட்டுப்படாமல் இருப்பதும், கிளர்ச்சி செய்வதும், தனது நோக்கத்தை நிறைவேற்றி கொள்வதற்காக அல்லாஹ்வின் கட்டளைகளை திரித்து கூறுவது ஆகியவை இறைவனது பிடிக்குக் காரணமாக அமைந்துவிடும் என்ற உண்மையை ஆழமாக சிந்தித்துணரும் நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக. அஹ்மதிகளாகிய நமக்கும் எல்லாரையும் விட அதிகமாக இவ்விஷயங்களை புரிவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக!

ஒரு துஆவின் பக்கமும் கவனமூட்ட விரும்புகின்றேன். உங்களுக்கெல்லாம் தெரிந்திருப்பது போன்றே பாகிஸ்தானின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. அரசாங்கமும் எதுவும் செய்ய

முடியாத நிலைக்கு வந்து விட்டது. அரசாங்கம் இல்லாத நிலை போன்றே அங்குள்ள நிலைமை இருக்கின்றது. எல்லாமே தீவிரவாதத்தை விரும்புபவர்களின் கைகளில் வந்து விட்டது. இஸ்லாத்தின் பெயரால் இஸ்லாத்திற்கு எதிரான செயல்கள் அங்கு செய்யப்படுகிறது.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை கொன்றால் கொன்றவர் முஸ்லிமே அல்ல என்ற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், பாகிஸ்தானில் முஸ்லிம்கள், முஸ்லிம்களை கொல்வதற்கு முயற்சி செய்து வருகின்றார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் பல உயிர்கள் பலியாகின்றன. தீவிரவாதம் அதன் எல்லையைத் தாண்டி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. பல சிறுவர்களும், சிறுமிகளும் அநாதைகளாகி விட்டார்கள். பல பெண்கள் விதவைகளாகி விட்டனர். பல குடும்பங்கள் சீர்குலைந்து போய் விட்டது. ஆனால் என்ன நடக்கிறது? எதன் பக்கம் இவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்? என்பதைப் பற்றி இவர்களுக்கு புரிவதேயில்லை. அல்லாஹ் இவர்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்க நீங்கள் துஆ செய்யுங்கள்.

இந்த நாட்டை நிறுவியதில் அஹ்மதிகளுக்கும் பங்கு இருக்கின்றது. இந்த நாடு உருவாகிய சமயத்தில் அதை உருவாக்குவதற்காக அஹ்மதிகள் இரத்தம் சிந்தியிருக்கின்றார்கள். இந்த நாட்டை வளர்ச்சி பெற்ற நாடாக உருவாக்குவதற்காகவும் அஹ்மதிகளின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கின்றது. இந்த நாட்டை பாதுகாப்பதற்கும் அஹ்மதிகளின் இரத்தம் வடிந்திருக்கின்றது. இன்று இவர்களுக்காக இறைவன் முன்பு குனிவதுதான் நாட்டுப்பற்று நம்மிடம் எதிர்பார்க்கின்ற நற்செயலாகும். இன்றுள்ள சூழ்நிலையில் அநீதியைத் தடுத்துநிறுத்த துஆவைத் தவிர நம்மிடம் வேறு எந்த சக்தியும் இல்லை. அநீதியை தடுக்க நம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதம் துஆ மட்டுமேயாகும். எனவே, துஆவின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள். பாகிஸ்தானிலிருக்கும் அஹ்மதிகளும் அதிகமாக துஆ செய்யுங்கள். உலகின் மற்ற நாடுகளிலிருக்கும் பாகிஸ்தானி அஹ்மதிகளும் இந்த நாட்டிற்காக துஆ செய்யுங்கள். உலகில் இருக்கின்ற பாகிஸ்தானியர்கள் அல்லாத அஹ்மதிகளும்கூட பாகிஸ்தானுக்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானிகள்தான் முதன் முதலில் மற்ற பல நாடுகளிலும் இந்த காலத்தின் இமாமின் தூதுச் செய்தியை எட்ட வைத்துள்ளனர். விண்ணிலிருந்து இறங்கியுள்ள அந்த நீரைப் பற்றி அந்நாட்டிலுள்ளவர்களுக்கு தெரிவித்து அவர்களை சரியான போதனையின் பக்கம் வழிநடத்தி நேர்வழிகாட்டியவர்கள் பாகிஸ்தானி அஹ்மதிகளாக இருக்கின்றார்கள். அப்போதனைகள் இக்காலத்தின் இமாமின் மூலமாக அவர்களுக்கு கிடைத்தது. அதனை மற்றவர்களுக்கு எட்ட வைத்தது அவர்கள் செய்த நன்மையாகும்.

அந்த நன்மையை ஈடு செய்வதற்காக ஒவ்வொரு அஹ்மதியும் பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காகவும் அந்த நாட்டிற்காகவும் துஆ செய்ய வேண்டும். பாகிஸ்தானிலுள்ள பாகிஸ்தானி அஹ்மதிகள் தங்கள் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களுக்கும் இதைப் பற்றி கவனமூட்டுங்கள். மற்றவர்களின் தாக்கம் சிறிதளவு அவர்களிடம் தென்பட்டாலும் அவர்கள் எத்தகைய தவறான வழியில் சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு புரிய வையுங்கள். நீங்கள் சுதந்திரமாக இருக்கின்ற வகையில் உங்களுக்கென்றே ஒரு நாட்டை தனது அருட்கொடையாக இறைவன் உங்களுக்கு வழங்கிய பிறகும் அதனை அழிப்பதற்கு ஏன் முற்படுகின்றீர்கள் என அவர்களிடம் கேளுங்கள். எந்த சமுதாயங்கள் இறைவனது அருட்கொடைகளுக்கு கண்ணியமளிப்பதில்லையோ அந்த சமுதாயங்களிடமிருந்து அந்த அருட்கொடைகள் பிடுங்கப்பட்டு விடும். பாகிஸ்தானி அஹ்மதிகள் இந்த செய்தியை தங்கள் சுற்றுப்புறத்திலுள்ளவர்களுக்கு கவனமூட்டும் வகையில் தெரிவிப்பதுடன் துஆவும் செய்ய வேண்டும். மேலும், உலகிலுள்ள ஒவ்வொரு அஹ்மதியும் பாகிஸ்தானுக்காக அதிகமாக துஆ செய்ய வேண்டும்.

பாகிஸ்தானிலுள்ள நிலைமை நாளுக்குநாள் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. கொடுமை இழைப்பவர்கள் அநீதியிழைப்பதில் வரம்பு மிறி செயல்படுகின்றார்கள். குண்டுகள் வெடித்தாலும், சுட்டுக் கொலை செய்யப் பட்டாலும், குத்தி கொலை செய்யப்பட்டாலும் அதன் எதிர்நடவடிக்கை என்ற வகையில் சிந்தித்து செயல்பட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பகரமாக, அறிவுப்பூர்வமான திட்டங்களை தீட்டுவதற்குப் பகரமாக மீண்டும் அடிதடி கொலை செய்வது, தீயிட்டுக் கொளுத்துவது, பொருட்களை உடைப்பது போன்ற செயல்களால் அழிவின் பக்கமே இவர்களது கவனம் செல்கிறது. எனவே மேலும் அழிவுகள் பரவிக் கொண்டிருக்கின்றது.

பொதுவாக பார்க்கும்போது பொதுமக்கள் நல்ல இயல்புடையவர்களாகத் தான் இருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவதில்லை. ஆனால் நாட்டை அழிக்க துடிக்கின்ற தீங்கு விளைவிக்கும் கும்பல்தான் இதை செய்து வருகிறது. இவர்கள் அறிவுடன் செயல்படமாட்டார்கள்

என்பதுதான் அல்லாஹ்வால் விதிக்கப்பட்டிருக்கின்றதென்றால் அல்லாஹ் இவர்களை விரைவாக பிடிப்பானாக. அதன் மூலம் நல்லவர்களையும் நாட்டையும் அல்லாஹ் பாதுகாப்பானாக. குழந்தைகளையும் பாதுகாப்பானாக. அல்லாஹ் இந்த நாட்டில் விரைவில் அமைதி நிலவும்படி செய்வானாக. ஆமீன்.

............

*KUTHBA*

**HAZRAT MIRZA MASROOR AHMAD**

***KALIFATHUL MASIH V***

***ON 14.12.07 AT LONDON***


***TRANSLATED BY : M .NIZAMUDEN***

***PUBLISHED BY :*** **MAJLIS KHUDDAMUL AHMADIYYA, MELAPALAYAM,TAMILNAD** ***TELEFAX : 0462 – 2352456***